பக்கங்கள்: ஆறு

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 6-00

சுடர் 11 வள்ளுவர் ஆண்டு 2026 மார்கழி 27 வியாழக்கிழமை (11-01-1996) UTHAYAN A Lively National Tamil Daily கதிர் 46

# கொழும்புக்கு செல்லும் தமிழர்களை

# வலிகாமத்தில் குடியேற்றத் திட்டம்!

## வவுனியாவில் வைத்து பலவந்தமாக கூட்டிச் செல்வதற்கு அரசு முயற்சி

வவுனியா, ஜனவரி 11

''சூரியப் பிரகாசம்'' இராணுவ நடவடிக்கை காரணமாக வலிகாமத்திலிருந்து இடம்பெயர்ந்து—

தமது உறவினர்களுடன் தங்கும் பொருட்டு கொழும்பு செல்வதற்கு வவுனியாவுக்கு வந்தவர்களை—

வலிகாமத்துக்கு கூட்டிச் சென்று பலவந்தமாக மீளக் குடியமர்த்த — அரசாங்கம் நடவடிக்கை எடுத்து வருவதாக அறியவந்துள்ளது.

கொழும்பு செல்வதற்கென இங்கு வந்தோர் வேப்பங்குளம் பயணிகள் தரிப்பு முகாமில் தங்கியுள்ளனர்.

முதற்கட்டமாக இவர்களில் 2,500 பேரைக் கூட்டிச் சென்று வலிகாமத்தில் உள்ள அவர்களது சொந்த வீடுகளில் குடியமர்த்த அரசு நடவடிக்கைகள் எடுத்து வருவதாக அறிய வந்துள்ளது.

(6 ஆம் பக்கம் பார்க்க)

## திருமலை நகரினுள் புலிகள் குண்டு வீச்சுத் தாக்குதல்!

சாவகச்சேரி, ஜன. 11

திருகோணமலையில்— ஸ்ரீலங்கா முப்படைகளின் அதிஉச்ச பாதுகாப்பு பகுதிக்குள் — விடுதலைப் புலிகள் ஊடுருவி அங்குள்ள பொலீஸ் காவலரண் ஒன்றின் மீது கைக் குண்டுத் தாக்குதல் ஒன்றை நடத்தியிருப்பதாக அறிவிக்கப்படுகின்றது.

கடந்த சனியன்று பிற்பகல் ஒரு மணியளவில் இத்தாக்குதல் சம்பவம் இடம்பெற்றது.

விமானப் படையினதும், கடற்படையினதும் பிரதான தளங்கள் அமைந்திருப்பதால் அதிகூடிய பாதுகாப்பில் திருகோணமலை நகர் உள்ளது என்பது தெரிந்ததே.

இப்பிரதேசத்தில் ஊடுருவிய விடுதலைப் புலிகள், துறைமுக வீதியில் பழைய பொலீஸ் நிலையப் பகுதியில் இருக்கும் பொலிஸ் காவலரண் ஒன்றின் மீது கைக்குண்டை வீசினர்.

இத்தாக்குதலில் ஏற்பட்ட சேதங்கள் குறித்து விரிவான தகவல்கள் இன்னும் கிடைக்கவில்லை. (உ-3)

### அதிகாரப் பரவல் யோசனைகள்:

## தமிழ்க் கட்சிகளுடன் நாளை அமைச்சர்கள் சந்திப்பு

கொழும்பு, ஜன. 11

அரசாங்கத்தின் அதிகாரப் பரவலாக்கல் யோசனைகள் தறித்து தமிழ்க்கட்சிகளின் பிரதிநிதிகளுடன் அரசாங்க அமைச்சர்கள் நாளை காலை 11 மணிக்கு பேச்சுவார்த்தை நடத்தவுள்ளனர்.

கொழும்பு கிராமோதய மண்டபத்தில் நடைபெறும் இச்சந்திப்பில் தபால் தந்தி அமைச்சர் மங்கள சமரவீர, அரசியலமைப்பு விவகார அமைச்சர் பேராசிரியர் ஜி எல். பீரிஸ் உட்பட பல அமைச்சர்கள் பங்குபற்றுவர்.

யாழ். நகரில் அரசு மேற்கொண்டு வரும் புனர் நிர்மாணப் பணிகள் தொடர்பாக தமிழ்கட்சிப் பிரதிநிதிகளிடம் கருத்து கோரப்படும் என்றும் தெரிவிக்கப்பட்டது.

தமிழர் விடுதலைக் கூட்டணி, புளொட், ஈ பி. ஆர். எல். எவ்., ஈ. பி. டி. பி. ரெலோ ஆகிய தமிழ்க் கட்சிகள் இச்சந்திப்பில் பங்குபற்ற உள்ளன. (அ-3)

### விமானத்திலிருந்து ஆயுதங்கள் வீசப்பட்ட சம்பவம்:

## கைதான ஜேர்மன் வாசி ஒப்புதல் புலிகளின் யாழ்.முகாமில் இருந்தவராம்

சென்னை, ஜன. 11

மேற்கு வங்காளத்தின் புருலியா மாவட்டத்தில் விமானத்தில் இருந்து ஆயுதங்கள் ''பரசூட்'' மூலம் வீசப்பட்ட சம்பவத்தில் தொடர்புடையவர் என்ற சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டிருக்கும் ஜேர்மன் நாட்டுப் பிரசை தாம் விடுதலைப் புலிகளின் யாழ்ப்பாணம், திருகோணமலை முகாம்களில் இருந்ததாக ஒப்புக்கொண்டிருக்கின்றார் என்ற புதிய தகவல் தற்போது இந்தியாவில் வெளியாகியிருக்கின்றது.

இதற்கிடையில்— விமானத்தில் இருந்து ஆயுதங்கள் போடப்பட்ட சம்பவத்தில் விடுதலைப் புலிகளின் தொடர்பு பற்றி விசாரிப்பதற்காக மத்திய புலனாய்வுப் பிரிவு (சி.பி.ஐ.) தன்னுடைய ஒரு குழுவை சென்னைக்கு அனுப்பவேண்டும் என்று ஜனதாக் கட்சித் தலைவர்

(6 ஆம் பக்கம் பார்க்க)

மற்றொரு செய்தி 3 ஆம் பக்கத்தில்

## பொங்கல் விழா வேண்டாம்; பிரார்த்தனையில் ஈடுபடுக!

### இந்து மாமன்றம் கோரிக்கை

கொழும்பு, ஜன. 11

தைப்பொங்கல் தினத்தன்று எவ்வித விழாக்களும் நடத்தாமல் பிரார்த்தனையில் மட்டும் ஈடுபடுமாறு — அகில இலங்கை இந்துமா மன்றம் இந்துக்களைக் கேட்டுள்ளது.

எமது சொந்த நாட்டிலேயே இலட்சக் கணக்கான மக்கள் இடம்பெயர்ந்து அவலப்படுகிறார்கள் —

இத்தகைய வேளையில் விழாக்கள், கொண்டாட்டங்கள் எதுவும் நடத்தாமல் — இடம்பெயர்ந்த மக்களுக்கு விமோசனம் கிடைக்க வேண்

(6 ஆம் பக்கம் பார்க்க)

## நாளை முதல் படகுச் சேவை

சாவகச்சேரி, ஜன 11

கிளாலி-பூநகரி படகு சேவை நாளை வெள்ளிக் கிழமை முதல் வழமை போல் நடைபெறும் என்று விடுதலைப் புலிகளின் அரசியல் துறையினர் அறிவித்துள்ளனர். (உ-3)

## கிளிநொச்சிக்கு உணவுப் பொருள்கள் அனுப்புவதற்கு அரசு பின்னடிப்பு!

சாவகச்சேரி, ஜன. 11

வலிகாமத்தில் இருந்து இடம்பெயர்ந்து கிளிநொச்சிக்கு வந்துள்ள மக்களுக்கு தேவையான உணவுப் பொருள்களை அனுப்ப அரசு பின்னடிப்பதாக தெரியவருகின்றது.

வன்னிக்கு இடம்பெயர்ந்த மக்களுக்கு தினமும் 35 லொறிகளில்— அதாவது 350 மெற்றிக்தொன் — உணவுப் பொருள்களை அனுப்ப புனர்வாழ்வு, புனரமைப்பு அமைச்சு இணங்கியிருந்தது—

அதன்படி தினமும் 35 லொறிகளில் பொருள்கள் அனுப்பப்படுவதாக புனர்வாழ்வு, புனரமைப்பு அமைச்சு பிரசாரம் செய்து

(6 ஆம் பக்கம் பார்க்க)

## வலிகாமம் பகுதியில் மோதல் சம்பவம்?

சாவகச்சேரி, ஜன. 11

வலிகாமம் பகுதியில் நேற்று முன்தினம் இரவு 9 மணி முதல் சுமார் ஒரு மணித்தியால நேரம் பீரங்கி, ஷெல் தாக்குதல்களின் சத்தமும் வேட்டுக்கள் தீர்க்கப்படும் சத்தமும் கேட்டன.

அனேகமாக நவக்கிரி, புத்தூர் பகுதிகளை அண்டிய பிரதேசங்களில் இடம்பெற்ற மோதல்களினால் இச் சத்தங்கள் கேட்டிருக்கலாம் எனக் கருதப்பட்டது.

இதே சமயம் பலாலி இரா

(6 ஆம் பக்கம் பார்க்க)

## யாழ். தேர்தல் ஆட்சேப மனுக்களை தள்ளுபடி செய்து நீதிமன்றம் தீர்ப்பு!

### ஈ.பி.டி.பியின் 9 பேரினதும் தெரிவு செல்லும்

கொழும்பு, ஜன. 11

1994 ஒகஸ்டில் நடைபெற்ற பொதுத்தேர்தலின் போது யாழ். மாவட்டத்திலிருந்து ஈ. பி. டி. பி. உறுப்பினர்கள் ஒன்பது பேர் எம். பிக்களாகத் தெரிவு செய்யப்பட்டதை ஆட்சேபித்து தாக்கல் செய்யப்பட்ட மனுக்களை விசேட தேர்தல் நீதிமன்றம் தள்ளுபடி செய்திருக்கின்றது.

விசேட தேர்தல் நீதிமன்ற நீதியரசர் எச். என். டி. ஜெயசூரிய இத்தீர்ப்பை வழங்கியிருக்கின்றார்.

இத்தேர்தலில் போட்டியிட்ட சுயாதீனக் குழு ஒன்றின் வேட்பாளரும், ஈ. பி. ஆர். எல். எவ் கட்சியும் இந்தத் தேர்தல் ஆட்சேபனை மனுக்களைத் தாக்கல் செய்திருந்தனர்.

யாழ்ப்பாண மாவட்டத்தில் பொதுத்தேர்தல் சட்டப்படியாக நடைபெறவில்லை என்றும் —

தேர்தலைப் பாதிக்கும் விதத்தில் பயமுறுத்தலும் வற்புறுத்தலும் இடம்பெற்றிருந்தன என்றும் இந்த மனுக்களில் சுட்டிக்காட்டப்பட்டிருந்தன. (உ-3)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வன்னி சென்றோருக்கு முத்திரைக்கு நிவாரணம்

சாவகச்சேரி, ஜன. 11

வலிகாமத்தில் இருந்து இடம்பெயர்ந்து வன்னியில் தங்கியுள்ளவர்களில் ''இ'' நிவாரண முத்திரை வைத்திருப்போருக்கான நிவாரணப் பொருள்களை வழங்க யாழ். அரச அதிபர் திரு. செ. பத்மநாதன் இணக்கம் தெரிவித்துள்ளார்.

வலிகாமத்தில் இருந்து இடம்பெயர்வதற்கு முன்னர் நிவாரணம் பெற்று வந்தவர்கள் தாம் வைத்திருக்கும் 'இ' முத்திரைகளை கிளிநொச்சி செயலகத்தில் கையளிக்கவேண்டும் என்றும் —

முத்திரைகள் யாழ். செயலகத்தில் சமர்ப்பிக்கப்பட்டதும் முத்திரைகளுக்கான உணவுப் பொருள்களை வழங்கலாம் என்றும் —

அவற்றை எடுத்துச் சென்று மக்களுக்கு விநியோகிக்கலாம் என்றும் — யாழ். அரச அதிபர் தெரிவித்தார். (அ-3)

# 6 கட்ட நிவாரணம் வழங்க அரச அதிபரிடம் கோரிக்கை

சாவகச்சேரி, ஜன. 11

''குடாநாட்டில் இருந்து வன்னி மாவட்டத்துக்கு இடம் பெயர்ந்துள்ளவர்களில் ஆறு கட்ட நிவாரணம் பெறத் தகுதியுடையவர்கள், வன்னியில் அந்த நிவாரணத்தைப் பெற ஏற்பாடு செய்து தர வேண்டும்.''

மேற்கண்டவாறு இடம் பெயர்ந்த தீவக மக்கள் நலன் காக்கும் கழகம் யாழ். அரச அதிபரைக் கேட்டுள்ளது.

தீவகம், வலிகாமம் பகுதிகளில் இருந்து இடம் பெயர்ந்து வடமராட்சி, தென்மராட்சி பகுதியில் தங்கி உள்ள 'இ' உணவு முத்திரை வைத்திருப்போருக்கு ஆறு கட்ட நிவாரணம் வழங்கியதற்காக அரச அதிபருக்கு நன்றி தெரிவிக்கும் அந்த அமைப்பு—

இடம்பெயர்ந்து வன்னியில் உள்ள 'இ' முத்திரை வைத்திருப்போருக்கும் கிளிநொச்சி அரச அதிபர் ஊடாக ஆறு கட்ட நிவாரணத்தை வழங்க ஏற்பாடு செய்யப்பட வேண்டும் என்று கோரியுள்ளது. (இ-3)

## வயிற்றோட்டம் கட்டுப்பாட்டில்

வடமராட்சி, ஜன. 11

கரவெட்டிப் பகுதியிலுள்ள நெல்லியடி, துன்னாலை ஆகிய இடங்களில் அண்மைக் காலமாகப் பரவியிருந்தவயிற்றோட்ட நோய் கட்டுப்பாட்டுக்குள் வந்துள்ளது.

பருத்தித்துறை சுகாதார வைத்திய அதிகாரி மேற்கொண்ட நடவடிக்கைகளைத் தொடர்ந்து இந்த நோய் கட்டுப்பாட்டின் கீழ் வந்துள்ளதாகத் தெரிவிக்கப் படுகிறது. (இ-173)

### மந்திகை ஆஸ்பத்திரியில்

# நோயாளிக்கு இரத்தம் கொடுத்த டாக்டர்!

வடமராட்சி, ஜன. 11

சத்திர சிகிச்சைக்கு உட்படுத்தப்பட்ட பெண் நோயாளி ஒருவருக்கு அவசரமாக இரத்தம் தேவைப்பட்ட போது பிரெஞ்சு வைத்தியக் குழுவைச் சேர்ந்த சத்திர சிகிச்சை நிபுணரான டாக்டர் பிரான்சிக்கா பிரான்ஸிஸ் தனது இரத்தத்தை வழங்கினார்.

மந்திகை வைத்தியசாலையில் இச்சம்பவம் இடம்பெற்றது.

அவசரமாகச் சத்திர சிகிச்சைக்கு உட்படுத்தப்பட்ட இப்பெண்ணுக்கு இரத்தம் வழங்க இரத்த வங்கியில் இரத்தம் இல்லாத போதே பிரஸ்தாப டாக்டர் இரத்தத்தை வழங்கினார் என்று தெரிவிக்கப்பட்டது. (இ-173)

### வவுனியா முகாம் பொறுப்பாளர்

# கழுத்து வெட்டப்பட்டே கொல்லப்பட்டார்!

வவுனியா, ஜன. 11

கொலை செய்யப்பட்ட வவுனியா சிதம்பரபுரம் நலன்புரி நிலையப் பொறுப்பாளர் தியாகராசா ஸ்ரீதரன் (வயது 36) கழுத்து வெட்டப்பட்டே படுகொலை செய்யப்பட்டார்

அவரது சடலம் வவுனியா, சிந்தாமணி பிள்ளையார் கோவிலுக்குச் செல்லும் வெளிச்சுற்று வீதியில் காணப்பட்டது.

கடந்த வெள்ளிக்கிழமை காலை கடமைக்கெனச் சென்ற அவர் அன்று மாலை வீடுதிரும்பாததால் அவரைத் தேடியவர்கள் சனிக்கிழமை சடலத்தைக் கண்டு பிடித்தனர்.

அகதிகளுக்கான ஐ. நா தூதரகத்தினால் பராமரிக்கப்பட்டுவரும் சிதம்பரபுரம் நலன்புரி நிலையத்தில் நானூகாயிரம் குடும்பங்கள் தங்கி உள்ளனர் என்று தெரிவிக்கப் படுகிறது. (இ)

# மந்திகையில் சிகிச்சை பெறுவோர் எண்ணிக்கை தினமும் அதிகரிப்பு

### கட்டில்களின் கீழ் நோயாளர் பாய்களில்

பருத்தித்துறை ஜன. 9

மந்திகை அரசினர் வைத்தியசாலையில் சிகிச்சை பெறுவோரின் எண்ணிக்கை அதிகரித்து வருகிறது.

கடந்த ஆண்டு மந்திகை அரசினர் வைத்தியசாலையில் 50 ஆயிரத்து 831 நோயாளிகள் சிகிச்சை பெற்றனர். இதில் 14 ஆயிரத்து 369பேர் வார்ட்டுகளில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்றனர். ஏனையோர் கிளினிக் நோயாளர்கள்.

முன்னைய ஆண்டுகளுடன் ஒப்பிடுகையில் கடந்த ஆண்டு மும்மடங்கு அதிக நோயாளர்கள் சிகிச்சை பெற்றுள்ளனர் என்றும் அதுவும் கடந்த வருட இறுதி மூன்று மாதங்களில் சிகிச்சைபெற்றோரின் எண்ணிக்கை வருட முதல் 9 மாதங்களைவிட அதிகம் எனவும் ஆஸ்பத்திரி வட்டாரங்கள் தெரிவித்தன.

இதே வேளை இப்போது இவ் வைத்தியசாலை நோயாளர்களால் நிரம்பி வழிகின்றது. குறிப்பாக 2, 3, 6, 7 ஆம் வார்டுகளின் நோயாளர்கள் கட்டிலில் கீழே பாய் போட்டுப் படுப்பதையும் நடைபாதையின் இருமருங்குகளிலும் பாய் போட்டுப் படுத்திருப்பதையும் காணக் கூடியதாகவுள்ளது.

யாழ். போதனா வைத்தியசாலை நிர்வாகத்தினர் தற்காலிக கொட்டகைகளை அமைக்கும் வேகம் மந்தகதியில் உள்ளது என மக்கள் குறைப்படுகின்றனர்.

மேலும் போதனா வைத்தியசாலையில் கடமையாற்றிய துறைசார் வைத்திய காலநிதிகள் இங்கு கடமையாற்றுவதனால் தினமும் சாவகச்சேரி அரசினர் வைத்தியசாலையில் இருந்து நோயாளர்கள் அம்புலன்ஸ் வண்டி மூலம் வந்து சேர்ந்த வண்ணம் உள்ளனர்.

# இ.தொ.காவுடன்இணைந்து பொ. ம. ஐ. மு. போட்டி?

### தொண்டாவுடன் பேச்சு நடக்கும்

கொழும்பு, ஜன. 11

மாகாண சபை, உள்ளூராட்சிச் சபைத் தேர்தல்களில் இ. தொ. காவுடன் இணைந்து போட்டியிடுவது குறித்து பொதுமக்கள் ஐக்கிய முன்னணி உயர்பீடம் ஆராய்ந்து வருவதாக கொழும்புப் பத்திரிகைச் செய்திதெரிவித்தது.

இது தொடர்பாக இ. தொ. கா. உயர் பீடத்துடன் பேச்சுவார்த்தை நடத்துமாறு அரசாங்கத்தின் உயர் பீடம், காணி, வனவள அமைச்சர் டி. எம். ஜெயரத்தினாவை பணித்துள்ளது என்றும் தெரிவிக்கப்பட்டது. (இ-3)

# புத்தூரில் படையினரிடம் பிடிபட்ட எட்டுப் பேர்

மந்திகை, ஜன. 11

கடந்த ஞாயிறன்று புத்தூர் கிழக்குப் பகுதியில் தமது வீடுபார்க்கச் சென்று இராணுவத்தின் பிடிக்குள் சிக்கியவர்களில் எட்டுப்பேரின் பெயர் விபரங்கள் தெரியவந்துள்ளன. அவை வருமாறு:-

★ சின்னத்தம்பி பொன்னுத்துரை (வயது 54)
★ வர்ணகுலசிங்கம் ரஞ்சன் [வயது 12]
★ மாணிக்கம் தெய்வானை (வயது 50)
★ சோமுசோதி (பெண்) (வயது 48)
★ சடையர் நவரட்ணம் (வயது 32)
★ சபாபதி நடராசா (வயது 28)
★ சின்னத்தம்பி பாலசுப்பிரமணியம் (வயது 40)
★ கந்தசாமி (வயது 50)

இவர்கள் அனைவரும் புத்தூரைச் சேர்ந்தவர்களாவர்.

## முதன்மை ஆசிரியர் கூட்டம்

யாழ். கல்வி வலயம் 1ஐச் சேர்ந்த முதன்மை ஆசிரியர்களையும், பாடங்களுக்குப் பொறுப்பான உதவிக் கல்விப் பணிப்பாளர்களையும் நாளை வெள்ளிக்கிழமை காலை 9-30 மணிக்கு சாவகச்சேரி மகளிர் கல்லூரியில் நடைபெறவிருக்கும் கூட்டத்துக்கு சமுகமளிக்கும்படி கல்விப் பணிப்பாளர் கேட்டுள்ளார்.

## படிப்பதற்கு வசதி

யாழ். பல்கலைக்கழக இறுதியாண்டு பரீட்சைக்குத் தோற்றும் மாணவர்களுக்கு —குறிப்பாக பாடக்குறிப்புக்களைத் தவறவிட்ட மாணவர்களின் நலன் கருதி — சாவகச்சேரி டிறிபேர்க் கல்லூரியில் இரவு-பகல் படிப்பதற்கான வசதிகள் செய்யப்பட்டுள்ளதாக பல்கலைக் கழக மாணவர் ஒன்றியம் தெரிவித்துள்ளது.

## மாட்டைத் திருடி பங்கு போட்ட திருடர்

சாவகச்சேரி, ஜன. 11

மாட்டுத் தொழுவத்தில் கட்டப்பட்டிருந்த வண்டில் மாடு(எருது) இரவு களவாடப்பட்டு இறைச்சிக்கு வெட்டப்பட்டது.

இந்த சம்பவம் கல்வயல் பகுதியில் கடந்த 5ஆம் திகதி இடம் பெற்றது.

களவாடப்பட்டிருந்தஇடத்தில் இருந்து சுமார் முக்கால் மைல் தூரத்தில் உள்ள பற்றைக்குள் அந்த மாட்டின் தலையும் அதன் கால்ப் பகுதிகளும் தோலும் கண்டுபிடிக்கப்பட்டன.

களவாடப்பட்ட மாட்டின் பெறுமதி 13 ஆயிரம் ரூபா எனத் தெரிவிக்கப்படுகிறது.

இதே தினம் இந்த வீட்டுக்கு அருகில் உள்ள வீடு ஒன்றில் இருந்து லுமாலா சைக்கிள் ஒன்றும் திருடப்பட்டுள்ளது. (இ-31)


## 75 ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்



மண்ணுலகில் 10-06-1929

விண்ணுலகில் 29-10 1995

கொககுவில் மணியகாரன் ஒழுங்கையைச் சேர்ந்த
அமரர்

**ஷண்முகரத்நம் குமரேசன்**

(முன்னைநாள் விரிவுரையாளர், கோப்பாய் அரசினர் ஆசிரியர் பயிற்சிக்கலாசாலை)

அளவற்ற அன்புவைத்து பண்பை வளர்த்து வைத்து
பற்றுமிகு பாசங்கொண்டு பலரும் போற்றும்
வண்ணம்

உணங்கொண்டு எமை உயர் கல்லூரிகளில்
பண்புடன் படிக்க வைத்து ஒளிஈந்த எந்தையே,
எம் தந்தையே,

இளமையிலே எம்மை விட்டு எங்கே சென்றீர்?
என்றும் உங்கள் ஆசியையே வேண்டுகின்றோம்.

அன்னாரின் இறுதிக்கிரியைகளிற் கலந்து சிறப்பித்தோருக்கும், அனுதாபச் செய்திகள், கண்ணீர் அஞ்சலிகள் வழங்கியோருக்கும், மருத்துவ வசதி வழங்கியோருக்கும் (யாழ். போதனா வைத்தியசாலை) மற்றும் பல வழிகளில் பலவாறு உதவியோருக்கும் எமது உளங்கனிந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

அவர்களின் ஆத்மா சாந்தி அடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

மனைவி, மக்கள்.

மே/பா ம. அருள்சோதிநாதன்,
'உடையார் வளவு',
மந்துவில், கொடிகாமம்.

(40151)


# மூன்றாம் சக்தி ஒன்றின் தலையீடு இனப்பிரச்சினைத் தீர்வுக்கு அவசியம்

### நீலன் கூறுகின்றார்

இனப்பிரச்சினைக்கு பேச்சுவார்த்தை மூலம் தீர்வு காண்பதற்கு மூன்றாவது சக்தி ஒன்றின் தலையீட்டை தமிழர் விடுதலைக் கூட்டணி விரும்புவதாக அககட்சியின் எம். பி. யான நீலன் திருச்செல்வம் கூறியுள்ளார்.

கடந்த வெள்ளிக்கிழமை வவுனியாவுக்குவிஜயம் செய்த நீலன் திருச்செல்வம், தமிழர் விடுதலைக் கூட்டணியின் வவுனியாக் கிளை அலுவலகத்துக்கு விஜயம் செய்து கட்சி முக்கியஸ்தர்களைச் சந்தித்துப் பேசினார்.

அப்போதே அவர் இனப்பிரச்சினைத் தீர்வு தொடர்பாக கட்சியின் நிலைப்பாட்டை எடுத்துக் கூறினார்.

அரசாங்கத்தின் இனப்பிரச்சினைத்தீர்வுக்கான யோசனைகள் தயாரிக்கப்பட்டபோது நாட்டில் சுமுகமான நிலை இருந்தது. ஆனால் அதற்குப் பின்னர் வடக்கில் பல இராணுவ நடவடிக்கைகள் இடம் பெற்று முடிந்துவிட்டன. நாடாளுமன்றத் தெரிவுக் குழுவுக்கு சமர்ப்பிக்கப்பட உள்ள பொதுமக்கள் ஐக்கிய முன்னணி அரசின் தீர்வு யோசனைகளை ஐக்கிய தேசியக் கட்சியும் ஏற்றுக் கொள்வதன் மூலமே இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண முடியும் என்றும் நீலன் திருச்செல்வம் கூறினார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### விமானத்திலிருந்து ஆயுதங்கள் போடப்பட்ட சம்பவம்;

# கைது செய்யப்பட்ட ஜேர்மனியர் புலிகளின் முகாமில் இருந்தவராம்!

## இந்திய புலனாய்வுப் பிரிவு தகவல்

புதுடில்லி, ஜன. 11

மேற்கு வங்காளத்தின் புருலியா கிராமத்தில், விமானத்தில் இருந்து ஆயுதங்கள் போடப்பட்ட சம்பவம் தொடர்பாக கைது செய்யப்பட்ட ஜேர்மன் நாட்டவர் ஒருவருக்கு விடுதலைப் புலிகளுடன் தொடர்பு இருப்பதாக சி. பி ஐ. என அழைக்கப்படும் இந்திய மத்திய புலனாய்வுப் பிரிவு தெரிவிக்கிறது.

ஜோர்மன் பிரான்ஸிஸ்கோ என்ற இந்த ஜேர்மன் நாட்டவர், புருலியாவில் உள்ள ஹோட்டல் ஒன்றில் வைத்துக் கைது செய்யப்பட்டார்.

இந்த மாத ஆரம்பத்தில் திருகோணமலை மாவட்டத்தில் உள்ள விடுதலைப் புலிகளின் முகாம் ஒன்றில் தாம் பத்துத் தினங்கள் தங்கி இருந்ததாக பிரஸ்தாப ஜேர்மன்காரர் ஒப்புக்கொண்டிருப்பதாக சி. பி. ஐ. தெரிவிக்கிறது.

அதே சமயம் ஆயுதங்களைப் போட்ட விமானத்தின் துணை விமானியான நியூசிலாந்தைச் சேர்ந்த டேவ் என்பவரைத் தேடும் நடவடிக்கையை இந்தியப் பொலீஸார் நேற்று மேற்கொண்டனர்.

புருலியா கிராமப் பகுதியின் எல்லைகளிலும் அங்குள்ள ஹோட்டல்களிலும் தேடுதல்கள் நடத்தப்பட்டன.

ஆயுதங்களைப் போட்ட விமானம் பம்பாய் விமான நிலையத்தில் தரையிறக்கப்பட்டசமயம் துணை விமானியான டேவ் விமானத்தில இருந்து இறங்கி தலைமறைவாகி இருந்தார் என்பது தெரிந்ததே. (இ-3)

## திருவாசக முற்றோதல்

சாவகச்சேரி, ஜன. 11

துன்னாலை கோயிற்கடவைப்பிள்ளையார் ஆலயத்தில் நாளை வெள்ளிக்கிழமை திருவாசகமுற்றோதல் நடைபெறும்.

யாழ்ப்பாணத்தில் பிரபல சைவப் பெரியார்கள், கல்விமான்கள், இசை அறிஞர்கள் முதலியோர் இதில் கலந்து கொள்ளவுள்ளனர். செல்வச்சந்நிதி முருகசாமி ஆசியுரை வழங்குவார். அறிஞர்களின் சமயச் சொற்பொழிவுகளும் இடம்பெறும். (இ-3)

★ ★ ★

பருத்தித்துறை மருதடி ஞான வைரவர் ஆலயத்தில் மூன்று நாள்களுக்கு தொடர்ச்சியான திருவாசக முற்றோதல் ஆரம்பமாகியுள்ளது.

நேற்று புதன்கிழமை ஆரம்பமான முற்றோதல் நிகழ்ச்சி இன்றும், நாளையும் மாலை வேளையில் நடைபெறும். (அ)

## இந்திய புலனாய்வுக் குழு விரைவில் கொழும்பு வரும்

கொழும்பு, ஜன. 10

மேற்கு வங்காளம் புருலியா மாவட்டத்தில் விமானத்திலிருந்து ''பரசூட்'' மூலம் ஆயுதங்கள் போடப்பட்ட சம்பவம்தொடர்பாக—

மேல் விசாரணை நடத்துவதற்காக இந்தியாவின் உயரதிகாரிகளைக் கொண்ட புலனாய்வுக் குழு ஒன்று கொழும்புவரவிருப்பதாகச் கொழும்புச் செய்திகள் தெரிவித்தன.

மேற்படி ஆயுதங்கள் போட்ட சம்பவத்தின் சூத்திரதாரி எனக்கருதப்படும் நபர் இந்தியாவிலிருந்து வெளியேறி இலங்கையில் தலைமறைவாகி இருப்பதாக இந்திய அதிகாரிகள் நம்புவதாகவும் —

புருலியாவில் ஆயுதங்கள் போடப்பட்ட சம்பவத்திற்கும் விடுதலைப்புலிகளுக்கும் தொடர்பு இருப்பதை இந்திய அதிகாரிகள் உறுதிப்படுத்தியிருப்பதாகவும் —

கொழும்புப் பத்திரிகைச் செய்தி ஒன்றில் தெரிவிக்கப் பட்டுள்ளது. (உ)

# ரணிலின் பாதுகாப்பு குறைப்பு குறித்து அமெரிக்கா இலங்கையிடம் கவலை

கொழும்பு, ஜன. 11

ஸ்ரீலங்காவின் எதிர்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்காவின் பாதுகாப்புக்கு அச்சுறுத்தல் ஏற்பட்டுள்ள இவ்வேளையில் அவருக்கு வழங்கப்பட்ட பாதுகாப்புக் குறைக்கப்பட்டது குறித்து அமெரிக்க அரசு தனது அதிருப்தியை வெளியிட்டுள்ளது.

அண்மையில் வாஷிங்டனிலுள்ள இலங்கைத் தூதுவர் ஜயந்த தனபாலா அமெரிக்க ராஜாங்க அமைச்சுக்கு அழைக்கப்பட்டார்.

அப்போது அமெரிக்க ராஜாங்க அமைச்சின் தென் ஆசிய வட்டகைக்கும் பொறுப்பான உதவிச் செயலாளரான திருமதி றொபின் றபாயேல் அமெரிக்க அரசின் அதிருப்தியை வெளியிட்டார்.

மற்றுமொரு ஜனநாயக நாட்டின் உள் விவகாரங்களில் தலையிட அமெரிக்க அரசு விரும்பவில்லை எனவும்-

ஆனால் கடந்த காலத்தில் ஸ்ரீலங்காவின் தேசியத் தலைவர்கள் பலருக்கு ஏற்பட்ட துர்ப்பாக்கிய முடிவு மீண்டும் நிகழக்கூடாது என்பதே அமெரிக்காவின் விருப்பம் எனவும்-திருமதி றபாயேல் தெரிவித்தார். (இ-10)

# வடக்கே தபால்களை எடுத்து வரும் பயணிகளை அச்சுறுத்தும் படையினர்

கொழும்பு, ஜன. 10

தெற்கில் இருந்து பெருமளவு தபால்கள் கொண்டு வரும் பயணிகள் தாண்டிக்குளத்தில் படையினரின் கெடுபிடிகளுக்கு உள்ளாவதாக வெரித்தாஸ் வானொலி தெரிவிக்கிறது.

தமது உறவினர்கள், நண்பர்களுக்கான கடிதங்களை எடுத்துவரும் பயணிகள் தாண்டிக்குளத்தில் கடும் சோதனைக்கு உட்படுத்தப்படுவதாகவும் -

தபால்களை எடுத்துச் செல்ல முடியாது என்றும்—

வவுனியாவில் உள்ள தபால் பெட்டிகளில் அவற்றை சேர்ப்பிக்குமாறும் — தாண்டிக்குளத்தில் உள்ள படையினர் பயணிகளை மிரட்டுகின்றனர் என்றும் — மேலும் தெரிவிக்கப் பட்டது. (இ 3)

## நலன்பேண் நிலையத்துக்கு செஞ்சிலுவைச்சங்கம் உதவி

வடமராட்சி, ஜன. 11

தென்மராட்சிப் பகுதியில் நலன்பேண் நிலையங்களுக்கு செஞ்சிலுவைச் சங்க யாழ். கிளை உதவிகளை வழங்கியுள்ளது.

வரணியில் உள்ள 15 இடம் பெயர்ந்தோர் முகாம்களில் உள்ள ஆயிரத்து 49 குடும்பங்களுக்கு ''லைவ்போய்'' சவர்க்காரமும்—

தனங்கிளப்பில் உள்ள 314 குடும்பங்களுக்கு சமையல் பாத்திரங்கள், உடுபுடவைகளும்—

மந்துவிலில் 355 குடும்பங்களுக்கு சவர்க்காரமும் —

கோயிலாக்கண்டியில் உள்ள 202 குடும்பங்களுக்கு உடுபுடைவை, சவர்க்காரம் ஆகியனவும் — வழங்கப்பட்டன. (இ-173)

## கடந்த 9 நாள்களில் 8 பேர் பாம்பினால் கடியுண்டனர்

### தென்மராட்சியிலேயே அதிகம்

மந்திகை, ஜன. 11

படுக்கையில் பாம்புக்கடிக்கு உள்ளாகி ஆபத்தான நிலையில் நேற்று முன்தினமும் ஒருவர் மந்திகை அரசினர் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டார்

வரணியில் அமைந்துள்ள குடிசை ஒன்றில் அதிகாலை இடம்பெற்ற இச்சம்பவத்தில் அச்சுவேலியில் இருந்து இடம் பெயர்ந்த இராசவடிவேல் ஜமுனாகரன் (வயது 23) என்பவரே பாம்புக்கடிக்கு உள்ளானவர் ஆவார். கடநத ஒன்பது நாள்களில் இவருடன் எட்டுப்பேர் பாம்புக்கடிக்கு உள்ளானார்கள். பாம்புக்கடியினால் பாதிக்கப்படுவோர் தென்மராட்சியிலேயே அதிகம் என்று தெரிவிக்கப்படுகிறது. (இ-15)

## ஹபரண இன்று வருகிறது

சாவகச்சேரி, ஜன. 10

அரச சார்பற்ற தொண்டர் அமைப்புக்களுக்கான நிவாரணப் பொருள்கள் மற்றும் ஆயிரம் மெற்றிக்தொன் மா ஆகியவற்றுடன் ''ஹபரண'' கப்பல் இன்று பருத்தித்துறைக்கு வந்து சேரவிருக்கிறது.

இக்கப்பலில் சில சர்வதேச அமைப்புகளின் பிரதிநிதிகளும் வரவிருக்கின்றனர். (இ-3-173)

## மாவீரரின் பெற்றோருக்கு

கடந்த மாதம் 20ஆம் திகதி ஸ்ரீலங்கா இராணுவத்துடன் யாழ். மாவட்டத்தில் ஏற்பட்ட நேரடி மோதலில் வீரச்சாவடைந்த 2ம் லெப். அழகு (இலட்சுமணன் இராஜசுரன், புன்னாலைக்கட்டுவன்) அவர்களுடைய பெற்றோரை மீசாலையிலுள்ள தென்மராட்சிக் கோட்ட மாவீரர் பணிமனையுடன் தொடர்பு கொள்ளுமாறு யாழ் மாவட்ட மாவீரர் பணிமனையினர் கேட்டுள்ளனர். (இ)


# உதயன்

## கிளை நிலையம் பருத்தித்துறை

வடமராட்சி வாழ் மக்களே!

உங்கள் வசதி கருதி பருத்தித்துறையில் உதயன் கிளை நிலையம் இப்போது இயங்குகிறது.

★ விளம்பரம் ★ விநியோகம்

இவை சம்பந்தப்பட்ட உங்கள் தேவைகளை உடனுக்குடன் நிறைவேற்ற கிளை நிலையத்தை நாடுங்கள்.

காலை 8-30 மணி தொடக்கம் பிற்பகல் 5 மணி வரை திறந்திருக்கும்.

**உதயன் கிளை நிலையம்**

பழைய பஸ் சதுக்கம், பருத்தித்துறை.


## பல்கலைக்கழக மாணவருக்கு ம. எண்ணெய்

சாவகச்சேரி, ஜன. 11

யாழ். பல்கலைக்கழகத்தில் இறுதியாண்டுப் பரீட்சைக்கு விண்ணப்பித்த மாணவர்களுக்கு லீற்றர் 25 ரூபா வீதம் 5 லீற்றர் மண்ணெண்ணெய் வழங்கப்பட உள்ளது.

11ஆம், 12ஆம், 16ஆம் 17ஆம் திகதிகளில் சாவகச்சேரி இந்துக் கல்லூரியில் அமைந்துள்ள யாழ்ப்பாணம் பல்கலைக்கழக உப அலுவலகத்தில் காலை 9-00 மணி முதல் 11-30 மணிவரை மண்ணெண்ணெய் வழங்கப்படும் என்று தெரிவிக்கப்படுகிறது. (இ)

## அன்னையை மீட்டல் அயலவர் கடனோ?

புகுந்த இடத்தில் புதிய உறவுகள்!
தகுந்த மதிப்பும் தழுவலும் உண்டு!
பழைய உறவுகளை பகைக்க வைக்கும்!
வழமை பேசி வாயும் ஓயப்
பலநாள் கழியும்! பார்த்த முகங்களில்
மலர்ந்த புன்னகை மயக்க வைக்கும்!
பொழுது போவதே புரியா திருக்கும்!
விருந்து பேணும் அருந்தமிழ்ப் பண்பவர்
குருதியிற் கலந்த பெருமை தன்னை
எண்ணும் போது கண்ணீர் துளிக்கும்;
மெய்ம்மயிர் சிலிர்க்கும்! வேற்றுப்புல மென்னும்
வேற்றுமை தெரியாமல் களிப்பில் மிதப்பர்!
இந்த வகையில் இனியநாள் கழியின்
நொந்து சுமந்து நெடிது வளர்த்த
சொந்த மண்ணை தொலைத்து விடுவரோ?
மறந்தும் போவரோ? அறத்தைத் துறந்து
கோளும் சொல்வரோ? கொடுமை! கொடுமை!
வருகஎன் மக்காள்! பெறுக இவ் வுண்மை!
உரிமை மண்ணின் உயர்ந்ததும் உண்டோ?
தன்னைத் தாங்கிய தாயை மறப்பரோ?
அன்னையை மீட்டல் அயலவர் கடனோ?
இன்னும் தூக்கம் ஏனோ?
எழுக இளைஞரே! ஏகுக களத்தே!

— பண்டிதர் வீ. பரந்தாமன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சின்னஞ் சிறு விளம்பரம்

### தேவை

பாவித்த ஸ்ரீல் கபினெட்டுகள் (Steel Cabinets), பைலிங் கபினெட்டுகள் (Filing Cabinets) உடன் தேவை. விலை விவரங்களுடன் நேரில் தொடர்பு கொள்ளவும். நிர்வாக இயக்குனர், உதயன் பணிமனை, பருத்தித்துறை வீதி, சரசாலை தெற்கு (கனகம்புளியடிச் சந்திக்கு அருகில்).

கனகம்புளியடிச் சந்திக்கு அண்மையில் உள்ள வீட்டில் தங்கியிருந்து சமையல் வேலைகளுடன் வயோதிபப் பெண்ணைப் பராமரிக்கக் கூடிய 15 வயதிற்கு மேற்பட்ட பெண் உதவியாளர் தேவை சாப்பாட்டுடன் தகுந்த சம்பளம் கொடுக்கப்படும். தொடர்பு: இல: 517, C/o உதயன், சரசாலை.

(39848)

### விற்பனைக்கு

C 50 (Super Cup) சுப்பர் கப் ரக மோட்டார் சைக்கிள் நல்ல நிலையில் விற்பனைக்குண்டு. தொடர்பு: திருமதி சிதாதேவி சச்சிதானந்தம், 'தங்கம்', டச் வீதி, மீசாலை. பார்வையிடும் நேரம் பிற்பகல் 3.00 — 5.00 மணி

(39849)

## அன்பளிப்பு

மந்திகை அரசினர் வைத்தியசாலை ஊழியர்களுக்கும் நேற்று சவர்க்காரம் அன்பளிப்பாக வழங்கப்பட்டது.

பிரான்ஸ் வைத்தியக் குழுவினரே ஆளுக்கு ஒரு கட்டி வீதம் சவர்க்காரம் வழங்கினர். (இ-15)

# கிழக்கில் டாங்கிகளை அழிக்கும் அதி சக்தி வாய்ந்த றொக்கட்டுகள்

## புலிகள் கொண்டு வந்துள்ளனராம்

யுத்த டாங்கிகளையும் பவள் ரக கவசவாகனங்களையும் தாக்கி அழிக்கக்கூடிய நவீன ரக றொக்கட் வகைகளை விடுதலைப் புலிகள் கிழக்கு மாகாணத்திற்கு கொண்டுவந்துள்ளனர் என பாதுகாப்புவட்டாரச் செய்திகள் தெரிவிப்பதாக 'லக்பிம' சிங்கள வார இதழ் தெரிவிக்கிறது.

சாதாரணமாக றொக்கட், ஆர். பி. ஜி. ஆகியவற்றால் ஏற்படும் சேதங்களைவிட இவற்றால் ஏற்படும் சேதம் அதிகம் என்றும்—

டாங்கிகள் ''பவள்'' கவச வாகனங்களைக்கூட எரித்து அழிக்கக்கூடிய ஆற்றல் மிகுந்தவை இந்த றொக்கட்டுகள் எனவும்—

இதனால் இராணுவ நடவடிக்கைகளின்போது யுத்த டாங்கிகளையும், ''பவள்', கவச வாகனங்களையும் பயன்படுத்துவது தற்போது ஒரு பிரச்சினையாக உருவெடுத்துள்ளது என்றும் தெரிவிக்கப்படுகிறது.

''சூரியப் பிரகாசம்'' இராணுவ நடவடிக்கைக்காக கிழக்கு மாகாணத்திலிருந்து 60 வீதமான படைவீரர்கள் மீளப்பெறப்பட்டதும் —

கிழக்கு மாகாணத்திலிருந்து சுமார் 10 அதிரடிப் படை முகாம்கள் அகற்றப்பட்டதுமே — புலிகளின் ஆற்றல் கிழக்கு மாகாணத்தில் அதிகரித்ததற்கான காரணம் என லக்பிம மேலும் தெரிவித்தது. (இ-10)

---

யாழ். மிட் - ரவுண் றோற்றறக் கழகம்
யாழ்ப்பாணம்

## விசேட பொதுக்கூட்டம்

கழக அங்கத்தவர்கள் அனைவரையும் இன்று 11-01-96 வியாழக்கிழமை பி. ப. 3-00 மணியளவில் சாவகச்சேரி நீதிமன்றத்தில் கூடுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

குறிப்பு:
கழகத்தின் முக்கிய விடயம் சம்பந்தமாக ஆராய விருப்பதால் அனைத்து அங்கத்தவர்களையும் தவறாது சமுகம் தருமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

- தலைவர்

(39929)

---

## கண்ணீர் அஞ்சலி

மல்லாகம் மகா வித்தியாலய ஆசிரியை
செல்வி வை. கமலராணி
அவர்களின் தந்தை

**நா. வைத்திலிங்கம்**
(ஓய்வுபெற்ற ஆசிரியர்)

அவர்கள் 27-12-95 இல் காலமானதையிட்டு அவருக்கு எமது கண்ணீர் அஞ்சலியை செலுத்துகிறோம்.

யா/ மல்லாகம் ம. வி'.
ஆசிரியர், நலன்புரிச்சங்கம்

(39943)

---

## இரண்டாம் ஆண்டு நினைவஞ்சலி — முதலாம் ஆண்டு நினைவஞ்சலி





வித்துவான்
**கந்தசாமி**
**காமாட்சிசுந்தரம்**
(நயினாதீவு)

திருமதி
**கனகம்மா**
**காமாட்சிசுந்தரம்**
(நயினாதீவு)

காலங்கள் நகர்ந்தாலும் கண்மணிகாள் தங்கள்
சீர் ஞாலத்தில் எம்மை வழி காட்டும்

உங்கள் ஆத்மா சாந்தியடைய
நயினை நாகபூசணி அம்பாளை பிரார்த்திக்கும்
மக்கள், மருமக்கள், உறவினர்கள்.

'கோமுகி''
கைதடி தெற்கு,
கைதடி.

(39942)

---

## செஞ்சிலுவைச் சங்கத்துக்கு அழைக்கப்படுவோர் விவரம்

செஞ்சிலுவைச் சங்க சர்வதேசக்குழுவின் பருத்தித்துறை அலுவலகத்துடன் அல்லது கிளிநொச்சி செஞ்சிலுவைச் சங்க சர்வதேசக்குழுவின் அலுவலகத்துடன் பின்வருவோரை தொடர்புகொள்ளுமாறு செஞ்சிலுவைச்சங்க சர்வதேசக்குழுவின் தேடுதல் பிரிவு கேட்டுள்ளது.

- சிவஞானம் சுஜரூபன், மே/பா. சுகுமாரன், 83, இராமநாதன் வீதி, யாழ்ப்பாணம்.
- செல்வராஜா செல்வராணி, மே/பா. ஜே. சிவப்பிரகாசம், மருத்துவமனை அருகில், கோப்பாய்.
- செல்லத்துரை மகாலிங்கம், மே/பா. திருமதி பொன் றோஸ் மகாலிங்கம், மாவட்ட வைத்தியசாலை, தெல்லிப்பளை.
- அப்புத்துரை சத்தியசிறி, மே/பா. முருகேசு, கைதடி வடக்கு.
- அப்புத்துரை ரவிபாலன், ஏழாலை மேற்கு.
- பாலசுப்பிரமணியம் திருச்செந்தூரன், மே/பா. இரத்தினம் உமாகாந்தன், 57, செம்மணி வீதி, நாயன்மார்கட்டு, யாழ்ப்பாணம்.
- நடேசபிள்ளை நேசகமலம், மே/பா. எம். முருகையா, காளிகோவில் ஒழுங்கை, உரும்பிராய் கிழக்கு.
- அருமைநாயகம் விமலதாசன், மே/பா. குருநாதர், ''ராஜபதி'', இருபாலை.
- மல்லிகாதேவன் அன்னராணி, மே/பா. ஈ. இரத்தினசிங்கம், ஊரெழு மேற்கு.
- இரத்தினம் உமாகாந்தன், மே/பா. கே. நிற்சிங்கம், 57, செம்மணி வீதி, நாயன்மார்கட்டு, யாழ்ப்பாணம்.
- சிவலிங்கம் கெங்காதேவி, மே/பா. எஸ். நேசராசா, 50, புதிய சிவன் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
- செல்லையா பரமநாதன், மே/பா. மகேஸ்வரி சொக்கலிங்கம், சிவகுமாரன் வீதி, உரும்பிராய்.
- தில்லையம்பலம் துரைராஜா, மே/பா. என். காராளசிங்கம், 17 ஆம் கட்டை, முல்லைத்தீவு வீதி, நெடுங்கேணி.
- இராசையா சிறிதரன், மே/பா. முருகேசு, கைதடி வடக்கு.
- நித்தியானந்தன் நிரோஜன், ஏழாலை மேற்கு, ஏழாலை.
- துரையப்பா காசிப்பிள்ளை, மே/பா. ஜே. கணேசதாசன், உடையார் வளவு, லவ் லேன், உடுவில்.
- சாம்பசிவக் குருக்கள் பாலசுப்பிரமணியக் குருக்கள், சிவன்கோவில், பருத்தித்துறை.
- இராமலிங்க ஐயர் சூரியப்பிரபாகர குருக்கள், 263, ஆனந்தவடலி வீதி, ஸ்ரீஞானவைரவர் கோவில், அரியாலை.
- இராமச்சந்திரன் லவன், ஸ்ரீலங்கா செஞ்சிலுவைச்சங்கம், யாழ்ப்பாணம்.
- சாந்தா அபிமன்னசிங்கம், சட்டத்தரணி, உடுவில்.
- ஆறுமுகசாமி குமார், சத்தியக்காடு, சுழிபுரம்.
- சின்னராசா பாலன், 391, கே. கே. எஸ். வீதி, யாழ்ப்பாணம்.
- கணபதிப்பிள்ளை இராஜேந்திரன், 331 (257), நாவலர் வீதி, யாழ்ப்பாணம்.
- இராஜேந்திரன் ஆனந்தராஜா, மே/பா. ஜே. ரவீந்திரன், தேவி கோவிலடி, ஏழாலை மத்தி.
- சின்னத்துரை லீலாவதி, மே/பா. பாலமேனன், வதிரி, கரவெட்டி.
- மோகனதாஸ் சரவணமுத்து, மே/பா. ரி. சத்தியமூர்த்தி (ஸ்ரீ), நுணாவில் மேற்கு.
- திருமதி ஏ. தவமணி, தேநீர்ச்சாலை, கனகம்புளியடிச்சந்தி.
- அம்பிகாபதி சரோஜினிதேவி, மே/பா. துரையப்பா, கண்டி வீதி, கைதடி.
- முத்தர் நடராஜா, மே/பா. லெட்சுமணர், புலோலி தெற்கு, புலோலி.
- வெள்ளையன் விஜயரத்தினம், மட்டுவில் தெற்கு, நுணாவில்.
- வைரமுத்து லோகேஸ்வரன், தேவகி அகதி முகாம், கைதடி.
- இராசதுரை மதனகோபால், தேவகி அகதி முகாம் கைதடி.
- எஸ். கந்தையா, சங்கத்தானை, சாவகச்சேரி.
- குமாரசாமி கலா, முகமாலை, பளை.
- ஆறுமுகம் மகாலிங்கம், கெருடாவில் கோவில் அகதி முகாம், சாவகச்சேரி.
- முருகேசு மாலா, மட்டுவில் வடக்கு.
- கணபதி அருச்சுனன், தேவகி அகதி முகாம், கைதடி.
- உருத்திராபதி, சந்திரபுரம், மட்டுவில் வடக்கு.
- செல்லக்கண்ணன், கடைக்கு முன்னால், நுணாவில் சந்தி.

(இ-10)

(முற்றும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மலையகப் பகுதிகளில் புலிகள் தீவிரமாக இயங்குகின்றனராம்!

## சிங்கள நாளிதழ் கூறுகிறது

கொழும்பு, ஜன. 11

மத்திய மலைநாட்டில் நகர் ஒன்றிற்கு அண்மையில் இரகசியமான இடங்களில் விடுதலைப் புலிகளின் செயற்பாடுகள் விரிவுபடுத்தப்பட்டுள்ளதாக 'திவயின' சிங்களப் பத்திரிகை தெரிவித்துள்ளது.

விடுதலைப் புலிகளின் அங்கத்தவர்கள் பெருமளவில் மலைநாட்டிற்குள் வந்துள்ளனர் என்றும்—

மலைநாட்டில் சுற்றிவளைப்புகளோ தேடுதல் வேட்டைகளோ மேற்கொள்ளப்படாததால் அவர்கள் அங்கு சுதந்திரமாக நடமாடக்கூடியதாக உள்ளது எனவும் —

அப் பத்திரிகை மேலும் தெரிவித்துள்ளது.

கொத்மலை தேர்தல் தொகுதியைச் சேர்ந்த ''குவின்ஸ்பெரி'' தோட்டத்திற்கு அண்மையில் அமைந்துள்ள ''ரிலாகல'' சரணாயத்திலும் பொகவந்தலாவை தோட்டங்களின் எல்லையில் அமைந்துள்ள பலாங்கொடை காட்டுப் பகுதியிலும், பயிற்சி வகுப்புகளும் ஆயுதப் பயிற்சிகளும் அளிக்கப்பட்டுவருவதாகவும் தகவல்கள் கிடைத்துள்ளதாக 'திவயின' தெரிவித்துள்ளது.

இதைவிட, விடுதலைப் புலிகள் அமைப்பின் வீடியோ படங்கள் மலைநாட்டின் பல பகுதிகளில் காட்டப்பட்டு வருவதாகவும் —

மலைநாடு முழுவதும் விடுதலைப் புலிகளின் புலனாய்வுச் சேவை திறம்பட இயங்கிவருவதாகவும்—

மலை நாட்டிலுள்ள பொலிஸ் நிலையங்களில் பணிபுரியும் தமிழ் அதிகாரிகளின் ஒத்துழைப்பு புலிகளுக்குக் கிடைத்துவருவதாகவும்—

அந்தப் பத்திரிகை மேலும் தெரிவித்துள்ளது.

(உ-10)

# உதயன்

## மருந்துத் தடை

குடாநாட்டின் வைத்திய சேவைக்குப் பெரும் பங்களிப்புச் செய்துவரும் செஞ்சிலுவைச் சங்க சர்வதேசக் குழு மருந்து வகைகளை இங்கேயும் எடுத்து வருவதற்கு அரசு அனுமதி மறுத்திருக்கிறது.

தமிழர்களின் விடுதலைப் போராட்டத்தை நசுக்கிவிடும் முயற்சியில் ஸ்ரீலங்கா அரசுகள் அவர்கள் மீது தொடர்ச்சியாக பல் வேறு அழுத்தங்களைப் போட்டு வருகின்றன.

மனிதனின் நாளாந்த வாழ்க்கைக்குரிய அடிப்படைத் தேவைகளுக்குரியவற்றைத் தடுத்து—

தமிழர்களின் வாழ்வியக்கத்தை முடக்குவதன் மூலம் அவர்களின் விடுதலை உணர்வை மழுங்கடித்து அடிமை கொண்டு விடலாம்—

என்ற தப்புக்கணக்குடனேயே இந்த அழுத்தங்கள் போடப்படுகின்றன.

வடக்கு-கிழக்கில் வாழும் தமிழர்களை ஸ்ரீலங்கா அரசாங்கம் தனது பிரசைகள் என்று உரிமைகொண்டாடுகிறது. தமிழர்களின் இதயங்களை வென்றெடுத்துத் தம் பக்கம் சேர்த்துக்கொள்ளப் போவதாக வேறு கூறுகிறது.

ஆனால் அந்நிய நாடொன்றின் மீதும், அந்நாட்டுப் பிரசைகள் மீதும் தடைகளை விதிப்பது போல, தமிழர்கள் மீதும் பலவகைத் தடைகளையும் போட்டு வருகிறது.

பொருளாதாரத் தடை என்று ஆரம்பித்து மக்களின் வாழ்வியக்கத்துடன் சம்பந்தப்பட்ட சகல அம்சங்களிலும் அரசாங்கம் கை போட்டுள்ளது.

அரசாங்கத்தின் இந்த அட்டூழியப் போக்கினால் பாதிக்கப்பட்டுள்ள மக்களுக்குக் கைகொடுத்து உதவ, மனித நேயத்தின் பாற்பட்டு சர்வதேச தொண்டர் நிறுவனங்கள் முன்வருகின்றன.

மக்கள் உணவின்றியும், மருந்து இன்றியும் மரணமடைந்துவிடக் கூடாதே என்ற இரக்க சிந்தையுடன் தம்மாலியன்ற உதவிகளைச் செய்து வருகின்றன.

இவர்களின் இந்த மனிதாபிமான உதவி, தனது முக்கிய குறிக்கோளான தமிழர் இன ஒழிப்பைத் தடுத்துவிடும் என்று அரசு அஞ்சுகிறது.

அதனாலேயே தொண்டர் நிறுவனங்கள் வழங்கும் உதவிகள் தன்னிடம் அல்லது தனது அனுமதி பெற்றுக்கொண்டு செல்லப்பட வேண்டும் என்று கட்டுப்பாடுகள் விதிக்கிறது.

தொண்டர் நிறுவனங்கள் விடுதலைப் புலிகளுக்கு உதவுகிறார்கள் என்ற ஆதாரமற்ற பொய்களைக் கூறி, அவற்றைக் களங்கப்படுத்தி விட்டு, அந்த உதவிக் கரங்களுக்குக் கட்டுப் போடுவதில் அரசு இப்போது தீவிரமாக ஈடுபட்டுள்ளது.

இலட்சக்கணக்கான மக்கள் இடம்பெயரும் போது நோய்கள் பெருகுவது இயல்பு. அவற்றைத் தடுப்பதற்கான மருந்தும் வைத்திய வசதியும் இல்லாவிடில் அவர்கள் செத்தொழிய நேரிடும்.

சந்திரிகா அரசின் தடைகள் அத்தகைய ஒரு முடிவை நாடியதே.

சர்வதேச உலகமும் தொண்டர் நிறுவனங்களும் இதனையும் ஓர் உள்நாட்டுவிவகாரம், அந்த நாட்டு அரசாங்கத்துடன் சம்பந்தப்பட்டது என்று கூறி விலகி நிற்காமல் —

தங்கள் மனித நேயத் தொண்டுகளைச் செய்வதற்கு ஏற்ற விதத்தில் வேறு மார்க்கங்களாலேனும் அரசுக்கு அழுத்தம் கொடுக்க முயல்வது நல்லது.

## இடம் பெயர்ந்த இடங்களில் ஓய்வூதியம் பெற வசதி

கொழும்பு, ஜன. 11

யாழ்ப்பாணத்தில் இருந்து இடம் பெயர்ந்த அரச ஓய்வூதியர்கள் கிளிநொச்சி, சாவகச்சேரி, மன்னார், வவுனியா, திருகோணமலை, கொழும்பு ஆகிய இடங்களில் உள்ள ஓய்வூதியத் திணைக்களத்தில் இருந்து அவர்களுக்குரிய மாதாந்த ஓய்வூதியர் பணத்தைப் பெறலாம்.

யாழ்.அரச அதிபர் ஊடாக இந்த ஓய்வூதியப்பணம் வழங்கப்படும் என்று ஓய்வூதியப் பணிப்பாளர் ஆரிய சமரவீர தெரிவித்துள்ளார்.

## மட்டக்களப்பு நகரில் படையினர் தீவிர தேடுதல்

கொழும்பு, ஜன. 11

மட்டக்களப்பு நகரில் கடந்த திங்கட்கிழமையும் படையினர் பெரிய அளவில் தேடுதல் நடவடிக்கையில் ஈடுபட்டனர்.

கடந்தவாரம் புதன்கிழமையும் இதுபோல் பெரிய அளவிலான தேடுதல் ஒன்றை படையினர் மேற்கொண்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

திங்கட்கிழமை அதிகாலை நகரின் பயணியர் வீதி, லேடி மனிங் வீதி, புதிய வீதி ஆகியவற்றில் படையினர் வீடு வீடாக சோதனை நடத்தினர்.

இதனால் பாடசாலை செல்லும் மாணவர்கள் மற்றும் அரச ஊழியர்கள் பெரிதும் பாதிக்கப்பட்டனர்.

(உ-3)

## மட்டு. நகரில் 100 மீற்றருக்கு ஒரு சோதனை நிலையம்

மட்டக்களப்பு, ஜன.11

மட்டக்களப்பு நகரில் 100 மீற்றருக்கு ஒன்று என்றகணக்கில் இராணுவ சோதனை நிலையங்கள் அமைக்கப்பட்டுள்ளன.

ஒவ்வொரு சோதனைநிலையத்திலும் பொதுமக்கள் சோதனை செய்யப்படுவதால் அவர்கள் பெரும் சிரமங்களை எதிர்நோக்குகின்றனர்.

நகரின் பிரதான நுழைவாயிலான திருமலை வீதி வாகனப் போக்குவரத்துக்காக மூடப்பட்டதைத் தொடர்ந்து ஏறாவூருக்குச் செல்லும் வாகனங்கள் இந்துக் கல்லூரி வீதி ஊடாகவும்—

வாழைச்சேனை, கல்முனை போன்ற இடங்களுக்கு செல்லும் வாகனங்கள் விஜயா படமாளிகை வீதியாலும் — செல்கின்றன.

வாகனங்கள் சோதனை நிலையங்களில் கடும் சோதனைகளுக்கு உள்ளாக்கப்படுகின்றன.

(இ-3)

## மாலை 5 மணியுடன் ஊர் அடங்கிப் போகிறது

மட்டக்களப்பு நகரில் படையினரின் சோதனைகள், கெடுபிடிகள் அதிகரித்துள்ளதையடுத்து —

நகரம் மாலை 5 மணியுடன் களையிழந்து விடுவதாக தெரிவிக்கப்படுகிறது.

பொதுமக்கள் தமது பணிகளை முடித்துக் கொண்டு நேர காலத்துடன் வீடுகளுக்குள் முடங்கிக் கொள்வதாகவும் —

பெரும் பதற்றத்துடன் அவர்கள் இரவைக் கழிப்பதாகவும்— தெரிவிக்கப்படுகிறது.

பகலிலும் மக்கள் தமது பணிகளை அவசரம், அவசரமாகச் செய்து விட்டு வீடுகளுக்கு திரும்புகின்றனர்.

## 3 நவீன விமானங்கள் கப்பலில் வந்து சேர்ந்தன

கொழும்பு, ஜன. 11

இஸ்ரேலிடம் கொள்வனவு செய்யப்பட்ட ஆறு நவீன ரக விமானங்களில், மூன்று விமானங்கள் கடந்த 7 ஆம் திகதி கப்பல் மூலம் கொழும்புத்துறைமுகத்தை வந்தடைந்துள்ளன என்று 'திவயின' பத்திரிகை செய்தி வெளியிட்டுள்ளது.

'கவ்பி' என்ழ பெயருடைய இந்த ஜெட் விமானங்கள் 7ஆயிரத்து 500 அடி உயரத்தில் இருந்து இலக்குத் தவறாமல் தாக்குதல் நடத்தக் கூடியவை என்றும் —

முழு அளவில் அவை கணனி மயப்படுத்தப்பட்டுள்ளன என்றும் — தெரிவிக்கப்படுகிறது.

இந்த விமானத்தில் இரு விமான ஓட்டிகள் மட்டுமே செல்ல முடியும் என்றும்—

இந்த விமானம் அதி உயரத்தில் செல்லக் கூடியதாகையால் புலிகளின் ஏவுகணைகள் இவற்றைத் தாக்க முடியாது என்றும் மேலும் தெரிவிக்கப்பட்டது.

அதே சமயம் ரஷ்யாவிடம் வாங்கப்பட்ட ''எம். ஐ-17'' ரக தாக்குதல் நடத்தக் கூடிய ஹெலிகளும் கொழும்புத் துறைமுகத்தை வந்தடைந்துள்ளன.

பாதுகாப்புக் காரணங்களால் இந்த ஹெலிகளின் விசேட அம்சங்கள் வெளியிடப்படவில்லை என்று ''திவயின'' மேலும் தெரிவிக்கிறது.

(இ-10)

## கடிதக்குண்டு வெடித்து கிழக்கில் சிப்பாய் காயம்

கொழும்பு, ஜன. 11

மட்டக்களப்பு இராணுவ முகாமைச் சேர்ந்த சிப்பாய் ஒருவருக்கு வந்த கடிதத்துக்குள் சிறிய ரக குண்டு ஒன்று இருந்தது. அவர் கடிதத்தைத் திறந்த போது குண்டு வெடித்தது.

கடந்த திங்கட்கிழமை இடம் பெற்ற இச்சம்பவத்தில் அந்தச் சிப்பாய் பலத்த காயம் அடைந்தார் என்று 'லங்கா தீப' பத்திரிகை செய்தி வெளியிட்டுள்ளது.

இதற்கு முன்னரும் இவ்வாறான சிறிய ரக குண்டுகள் வைக்கப்பட்ட கடிதங்கள் கிழக்கு மாகாணத்தில் சிலருக்கு அனுப்பப்பட்டிருந்தன.

மட்டக்களப்பு இராணுவ பிரிகேடியர் சாந்த கொட்டேகொடவுக்கும் இப்படியான ஒரு கடிதம் அனுப்பப்பட்டது.

ஆனால் அவருக்குக் கிடைக்கும் கடிதங்கள் முதலில் குண்டுகளை செயல் இழக்கச் செய்யும் பிரிவினரால் சோதனைக்கு உட்படுத்தப்படுவதால் அவர் ஆபத்தில் இருந்து தப்பிவிட்டார் என்று 'லங்கா தீப' மேலும்தெரிவித்துள்ளது.

# படையினர் காலால் உதைத்து தட்டிப்பார்த்து 'ஆள்சரி' என்றனர்

## புத்தூரில் தப்பியோர் குறித்து மேலும் தகவல்கள்

சாவகச்சேரி, ஜன. 11

ஞாயிறன்று புத்தூர் பகுதியில் உள்ள கிழுவதிரை வயல் கரையால் வந்த படையினர் எம்மை நோக்கி துப்பாக்கிப்பிரயோகம் செய்தனர். அப்போது புத்தூர் கிழக்கைச்சேர்ந்த வர்ணகுலசிங்கம் என்பவர் முதுகில் காயமடைந்தார். படையினரைக்கண்டவுடன் அவர் காயத்துடனேயே குப்புறப் படுத்துவிட்டார். இவருக்கு அருகில் நானும் குப்புறப் படுத்துக்கொண்டேன். படையினர் எமக்கு அருகில் வந்ததும் ''எழும்பு'' என்று உரக்கக் கத்தினார்கள். நாங்கள் இருவரும் பேசாமல் படுத்துக் கிடந்தோம். அப்பொழுது எனது அருகில் கிடந்த வர்ணகுலசிங்கத்தை சப்பாத்துக்காலால் உதைத்துத் தட்டிப் பார்த்த சிப்பாய் ஒருவர் ''ஆள்சரி'' என்று கூறினார். அதன் பின்னர் படையினர் அங்கிருந்து சென்று விட்டனர்,

புத்தூரில் கடந்த ஞாயிற்றுக்கிழமை நிகழ்ந்த சம்பவத்தில் உயிர்தப்பிய தங்கராசா செல்வரூபன் என்ற சிறுவன் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

புத்தூர் கிழக்குப்பகுதியில் உள்ள தமது வீடுகளைப் பார்க்கச்சென்ற இடத்தில் படையினர் இவர்கள் மீது துப்பாக்கிப்பிரயோகம் செய்தது தெரிந்ததே.

செல்வரூபன் மேலும் தெரிவிக்கையில் —

சம்பவம் நடந்த தினத்துக்கு முன்பாக தமது வீடுகளில் உள்ள பொருள்களை எடுத்து வருவதற்காக புத்தூர் பகுதிக்குப் பலர் சென்றுவந்தனர்.

சம்பவதினம் நானும் எனது தகப்பனாரும் சைக்கிளில் புத்தூர் சென்றோம். எம்முடன் மேலும் பலர் வந்து கொண்டிருந்தனர். எங்கள் வீட்டுக்குச் சென்று தேங்காய் உட்பட மண்வெட்டி, சமையல் பாத்திரங்கள் ஆகியவற்றை சாக்கில் கட்டி வந்தோம்.

நான் மண்வெட்டியின் உதவியுடன் தேங்காய்களை உரித்துக் கொண்டிருந்த போது, திடீர் என துப்பாக்கி வேட்டுச் சத்தங்கள் கேட்டன. இறந்தவன் போல் கிடந்ததினால் நான் தப்ப முடிந்தது. — என்று கூறினார்.

(இ-31)

## செப்ரிசீமியா: இளம் தாயார் பலி!

வடமராட்சி, ஜன. 11

இரட்டைக் குழந்தைகளைப் பெற்ற இளம் தாய் ஒருவர் செப்ரிசீமியா நோயினால் மரணமானார்.

வரணியைச் சேர்ந்த இராசலிங்கம் யோகேஸ்வரி (24 வயது) என்பவரே மரணமானவர் ஆவார்.

மந்திகை அரசினர் ஆதார வைத்தியசாலையில் கடந்த 6ஆம் திகதி இவர் இரட்டைக் குழந்தைகளைப் பெற்றெடுத்தார்.

இப்பெண் செப்ரிசீமியா நோயினால் பீடிக்கப்பட்டு குழந்தைகளைப் பெற்றெடுத்த மூன்றாம் நாள் மரணமானார்.

இவர் பெற்றெடுத்த இரட்டைப் பெண் குழந்தைகளும் சுகமே இருக்கின்றன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சைக்கிள் - மினிபஸ் விபத்தில் இருவர் மரணம்

## மற்றொருவர் காயம்

பருத்தித்துறை — யாழ்ப்பாணம் பிரதான வீதியில், அல்வாய் தெருமூடிமடம் சந்திக்கு அண்மையில் நேற்று முற்பகல் 11.00 மணியளவில் இடம் பெற்ற மினிபஸ் — சைக்கிள் — மோட்டார் சைக்கிள் விபத்தில் இரண்டு பேர் உயிரிழந்தனர்; மற்றொருவர் படுகாயமடைந்தார்.

இச்சம்பவத்தில் சைக்கிளில் சென்றவரான நடராசா தவராசேஸ்வரி (வயது 38) என்பவரும், இவரை ஏற்றிச் சென்றவரான வேலுப்பிள்ளை ஆறுமுகம் (வயது 50) என்பவருமே உயிரிழந்தனர். மோட்டார் சைக்கிளில் வந்த தில்லைநாதன் தர்மகுலசிங்கம் (வயது 47) என்பவர் காயம் அடைந்தார்.

படுகாயமடைந்தவர் மந்திகை அரசினர் வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

(இ-15-173-80)

# மாகாணசபை கலைப்புக்கு எதிரான இரு மனுக்கள் இன்று விசாரணைக்கு

கொழும்பு, ஜன. 11

வடமத்திய, சப்பிரகமுவ மாகாணசபைகள் கலைக்கப்பட்டதை ஆட்சேபித்து கலைக்கப்பட்ட அச்சபைகளின் முதலமைச்சர்கள் தாக்கல் செய்துள்ள மனுக்கள் இன்று மேன்முறையீட்டு நீதிமன்றத்தில் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப் படவிருக்கின்றன.

இதேவேளை—

மேற்படி இரு மாகாண சபைகளையும் கலைத்ததை ஆட்சேபித்தும், அச்சபைகளுக்கு புதிய தேர்தல்கள் நடத்தப்படுவதை நிறுத்தும்படி உத்தரவிடக் கோரியும், அந்தச் சபைகளின் இரண்டு அமைச்சர்கள் தாக்கல் செய்த மனுக்கள் நேற்று நீதிமன்றத்தில் வாபஸ் பெறப்பட்டன.

கலைக்கப்பட்ட வடமத்திய மாகாணசபை அமைச்சர் ரி. திஸாநாயக்கவும், கலைக்கப்பட்ட சப்பிரகமுவ மாகாண சபையின் அமைச்சர் ஏ. எம். விஜேதுங்கவும் இந்த மனுக்களைத் தாக்கல் செய்திருந்தனர்.

இந்த இரண்டு மனுக்களும் நேற்று நீதிமன்றத்தில் எடுத்துக்கொள்ளப்பட்டதும் மனுதாரர்கள் சார்பில் ஆஜரான சட்டத்தரணிகள் மனுக்களை வாபஸ் பெறுவதாக அங்கு தெரிவித்தனர்.

அதனை ஏற்றுக்கொண்ட நீதியரசர்கள் செலவுத் தொகையின்றி மனுக்களைத் தள்ளுபடி செய்தனர்.

## முகாம்களில் உள்ளோருக்கு

# சமைத்த உணவு வழங்குதல் நேற்றுடன் நிறுத்தப்பட்டது

சாவகச்சேரி, ஜன. 11

வலிகாமத்தில் இருந்து இடம்பெயர்ந்து முகாம்களில் தங்கியுள்ளவர்களுக்கு சமைத்த உணவு வழங்குவதை தமிழர் புனர்வாழ்வுக் கழகம் நேற்றுடன் நிறுத்திக் கொண்டது.

அதனை அடுத்து முகாம்களில் உள்ளவர்கள் சமைத்து உண்பதற்காக இரு வார உலர் உணவுப் பொருள்கள் யாழ். செயலகத்தால் வழங்கப்பட்டுள்ளன.

வலிகாமத்தில் இருந்து இடம்பெயர்ந்து தென்மராட்சி, வடமராட்சிப் பகுதிகளில் முகாம்களில் தங்கியுள்ளவர்கள் தாமே சுயமாகச் சமைத்துச் சாப்பிட உதவும் வகையில் இந்த நிவாரணப் பொருள்கள் வழங்கப்படுகின்றன.

முகாமில் உள்ளவர்கள் தமது வசதிக்கு ஏற்ப கூட்டாகவோ அல்லது தனியாகவோ சமைத்து உண்ணலாம் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

''சூரியப் பிரகாசம்'' இராணுவ நடவடிக்கை காரணமாக இடம்பெயர்ந்து முகாம்களில் தங்கியிருந்தோருக்கு கடந்த பத்து வாரங்களாக சமைத்த உணவு வழங்கப்பட்டு வந்தமை குறிப்பிடத்தக்கது.

(அ-3]

## டிசம்பர் மாத ஒய்வூதியம்

சாவகச்சேரி, ஜன. 11

யாழ். மாவட்டத்துக்குள் இடம்பெயர்ந்து இதுவரை டிசம்பர் மாத ஒய்வூதிய வவுச்சர்களை பெறாத ஒய்வூதியர்களில் —

தென்மராட்சி பகுதி வங்கிகளில் ஒய்வூதியம் பெறுவோர்— தமது வவுச்சர்களை சாவகச்சேரி இந்துக் கல்லூரியில் இயங்கும் யாழ். செயலகத்திலும்—

வடமராட்சிப் பகுதி வங்கிகளில் ஒய்வூதியம் பெறுவோர் தமது வவுச்சர்களை பருத்தித்துறை பிரதேச செயலர் பணிமனையிலும் — பெறலாம் என யாழ். ஒய்வூதியப் பிரிவு கணக்காளர் திரு. கா. வீரசிங்கம் அறிவித்துள்ளார்.

# மரண அறிவித்தல்கள்

திருமதி

## குலமணி அபிமன்னசிங்கம்

(உடுவில்)

திருமதி குலமணி அவர்கள் நேற்று (10-01-96) புதன்கிழமை சிவபதமடைந்தார்.

இவர் காலஞ்சென்ற வெற்றிவேலு அபிமன்னசிங்கம் (இளைப்பாறிய உடுவில் விதானை) அவர்களின் அன்பு மனைவியும், இராஜகுலதேவி (இளைப்பாறிய ஆசிரியை), மாணிக்கசோதி மாஸ்ரர் (இளைப்பாறிய ஆசிரியன்), சாந்தா (சட்டத்தரணி), உதயகுமார் (பொறியியலாளர்) என்போரது அன்புத் தாயாருமாவார்.

இறுதிக்கிரியைகள் இன்று (11-01-96) வியாழக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு கிளான், துன்னாலை தெற்கில் (கலிகைச் சந்தியிலிருந்து சாவகச்சேரி நோக்கிய பாதையில், கிளான் சங்கக்கடை அருகில், சிறீபதி மாஸ்ரர் வீடு) நடைபெற்று ஈமக்கிரியைகள் துன்னாலை தெற்கு பிட்டிது சுடுகாட்டில் நடைபெறும்.

இத்தகவலை உற்றார், உறவினர், நண்பர்களை ஏற்குமாறு வேண்டுகிறோம்.

குடும்ப சார்பில்:
மாணிக்கசோதி மாஸ்ரர்
உடுவில்

உடுவில் கிழக்கு,
உடுவில்.

(40076)

## திருமதி பவளம்மா நடராசா

அச்சுவேலியைச் சேர்ந்த திருமதி பவளம்மா நடராசா 23 - 11 - 1995 இல் காலமாகிவிட்டார்.

இவர் காலஞ்சென்ற கணபதிப்பிள்ளை, அன்னம்மா ஆகியோரின் மூத்தமகளும், அல்வாயைச்சேர்ந்த காலஞ்சென்ற நடராசாவின் மனைவியும், காலஞ்சென்ற மாணிக்கம் நடராசா, மற்றும் ஞானசம்பந்தன், ஞானசுந்தரம், திருமதி கருணாதேவி சிவகுருநாதன் ஆகியோரின் தாயாரும் ஆவார்.

அன்னாரது ஈமக் கிரியைகள் நடைபெற்று முடிந்தது என்பதை அறியத் தருகின்றோம்.

தகவல்:
திருமதி K. சிவகுருநாதன்

அல்வாய்.

(40152)

இப்பத்திரிகை நியூ உதயன் பப்பிளிகேசன் (பிறைவேற் லிமிட்டெட்டினரால் சாவகச்சேரி, சரசாலை தெற்கில் உள்ள அவர்களது தற்காலிகப் பணிமனையில் 11-01-96 இல் அச்சிட்டுவெளியிடப்பட்டது.

# அரசின் தீர்வுத்திட்ட யோசனைகளை குழப்பும் முயற்சிகளில் ஈடுபடாதீர்!

## தமிழ்க்கட்சிகளுக்கு சிவசிதம்பரம் கூறும் புத்திமதி இது

கொழும்பு, ஜன. 11

இனப்பிரச்சினைக்கு தீர்வு காண்பதற்காக அரசாங்கம் யோசனைகளை முன்வைத்துள்ளது. தீர்வு முயற்சிகளுக்கு குந்தகம் விளைவிக்கக் கூடிய வகையில் தேவையற்ற. அநாவசியமான - கோரிக்கைகளை தமிழ் அரசியல் கட்சிகள் முன்வைக்கக் கூடாது.

— தமிழர் விடுதலைக் கூட்டணித் தலைவர் திரு. எம். சிவசிதம்பரம் மேற்கண்டவாறு தமிழ் அரசியல் கட்சிகளிடம் கோரிக்கை விடுத்திருக்கின்றாராம்.

வடக்கு - கிழக்கு மாகாணத்தில் வாழும் மக்கள் ஓர் அமைதியான வாழ்க்கையையே இன்று விரும்புகிறார்கள். இதனைக் கருத்தில் கொண்டு அவர்கள் விரும்பும் அமைதி மிக்க வாழ்வை ஏற்படுத்த நடவடிக்கை எடுக்க வேண்டும்.

தற்போது தமிழ்க் கட்சிகள் முன்வைக்க முயலும் கோரிக்கைகள் தமிழ்மக்களின் அமைதிக்கு குந்தகமாகவே அமையும்.

—இவ்வாறு அவர் மேலும் தெரிவித்தார்.

அரசின் தீர்வு யோசனைகள் தொடர்பாக நான்கு அம்சக் கோரிக்கைகளை முன் வைக்கப்போவதாக ஈ.பி.ஆர்.எல்.எவ்., புளொட், ரெலோ, ஈரோஸ் ஆகிய நான்கு தமிழ்க் கட்சிகள் அறிவித்திருப்பது குறிப்பிடத்தக்கது.

(உ-3)

## அதிபர்களுக்கு அழைப்பு

சாவகச்சேரி, ஜன. 11

யாழ். கல்வி வலயம் இரண்டிற்கு உட்பட்ட உயர்தர வகுப்புகளைக் கொண்ட பாடசாலைகளின் அதிபர்களை அண்மையில் வெளியான ஜி. சீ. ஈ. உயர்தரப் பரீட்சைப் பேறுபேறுகளின் மூலப்பிரதியுடனும் —

அதன் நிழற்படப் பிரதியுடனும் — இன்று வியாழக்கிழமை காலை 10 மணிக்கு முன் வலயம் - 2 அலுவலகத்துக்குச் சமுகமளிக்குமாறு வலயம் - 2 இன் பிரதிக் கல்விப் பணிப்பாளர் திரு. வ. இராசையா அறிவித்துள்ளார்.

(இ-7)

### கிளிநொச்சி...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

வருவதும் — தெரிந்தவேயே.

ஆனால் கடந்த மாதம் 22 ஆம் திகதிக்கு பின்னர் கிளிநொச்சிக்கு எந்த வித உணவுப் பொருள்களும் அனுப்பப்படவில்லை என்ற விடயம் இப்போது வெளிவந்துள்ளது.

உணவு அல்லாத— பிளாஸ்ரிக் பொருள்கள், உடுபுடைவைகள் போன்ற நிவாரணப் பொருள்களும், கிடுகுகளும் தான் லொறிகள் மூலம் எடுத்து வரப்பட்டன என்ற தகவலும் வெளியாகியுள்ளது.

கிளிநொச்சி அரச அதிபரிடம் உணவுக் கையிருப்பு முடிவடைந்து விட்டதாகவும்—

ப. நோ. கூ. சங்கங்களை பொருள் வழங்குமாறு அரசு அதிகாரிகள் கோரியுள்ளதாகவும் — தெரிவிக்கப்பட்டது.

(உ-3)

### வலிகாமம்...

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

ணுவ முகாமில் இருந்து தொண்டமானாறு, கெருடாவில், மயிலியதனைப் பகுதிகளை நோக்கி களும் செல் தாக்குதல்களும் இடம்பெற்றன.

(உ-15-80)

# அமைச்சரின் வீட்டை படம்பிடித்த இரு தமிழர்கள்

## பொலிஸ் தேடுகின்றதாம்

கொழும்புதெகிவளை ஸ்ரேசன் வீதியிலுள்ள கைத்தொழில் அபிவிருத்தி அமைச்சர் ஸி.வி குணரத்தினவின் வாசஸ்தலத்தைக் புகைப்படம் பிடித்ததாக கூறப்படும் இரண்டு தமிழ் இளைஞர்களை தெகிவளைப் பொலீஸார் தேடிவருவதாகக் கொழும்புச் செய்திகள் தெரிவிக்கின்றன.

கடந்த மாதம் 26 ஆம் திகதி அமைச்சரின் வாசஸ்தலத்தையும் அதைச் சுற்றியுள்ள பகுதிகளையும் சந்தேகநபர்கள் இருவரும் புகைப்படம் பிடித்ததாக பொலீஸார் தெரிவிப்பதப்பதாக இலங்கை வானொலி அறிவித்தது.

(உ-3)

## வெடிகுண்டுகள் பிடிபட்டன?

கொழும்பு, ஜன. 11

கடந்த திங்களன்று சிலாபத்திற்கு அண்மையில்உடப்பு கடற்பகுதியில் சென்று கொண்டிருந்த படகு ஒன்றை வழிமறித்த படையினர் அதிலிருந்த 880 இறாத்தல் வெடிப் பொருள்களைக் கைப்பற்றியிருப்பதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

இவை விடுதலைப்புலிகளுக்கு எடுத்துச் செல்லப்பட்டவையாக இருக்கலாம் என்று சந்தேகிக்கப்படுவதாக பொலீஸ் வட்டாரங்களை மேற்கோள் காட்டி செய்தி ஏஜென்சி ஒன்று தகவல் வெளியிட்டது.

(உ-6)

### பொங்கல்...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

டும் என்ற பிரார்த்தனையில் சகல இந்துக்களும் ஈடுபட வேண்டும் —

பொங்கல் வாழ்த்து மடல்களை இம்முறை அனுப்ப வேண்டாம். அதற்குச் செலவிடும் பணத்தை வடக்கு - கிழக்கில் இடம்பெயர்ந்து தவிக்கும் மக்களுக்கு நிவாரணம் வழங்குவதற்குக் கொடுத்து உதவுங்கள் — என்றும் இந்துமா மன்றம் இந்து மக்களிடம் கேட்டுள்ளது.

### கொழும்புக்கு...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

ஆனால் —

இவர்கள் யாழ்ப்பாணத்துக்குத் திரும்பிச் சென்று இயல்பான வாழ்க்கையை நடத்த விரும்பியதாலேயே—

அரசாங்கம் அதற்கான ஏற்பாடுகளைச் செய்வதாக —

உத்தியோகபூர்வ வட்டாரங்கள் தெரிவித்ததாக 'லங்காபுவத்' செய்தி வெளியிட்டுள்ளது.

(அ-3)

## இடர்களை பதிக ஓதுதல் பூர்த்தி விழா

தமிழ் மக்களின் துன்பங்கள் நீங்க பெரியமாவடி - வித்தகம் - திநீருலகண்ட பிள்ளையார் ஆலயத்தில் கடந்த 45 தினங்களாக நடைபெற்ற இடர் களை பதிகம் ஓதுதல் பூர்த்தி மண்டல பூசை விழா இன்று காலை 6 மணி முதல் நடைபெறும்.

இந்த விழாவில் பிரம்மஸ்ரீ சபாரத்தின ஈஸ்வரசர்மா, திரு. எஸ். ஸ்ரீதயாளன் ஆகியோரின் தெய்வீக உரைகளும் இடம்பெறவுள்ளன.

(அ-31)

### ...தான...

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

எஸ். சுப்பிரமணியசுவாமி கேட்டுள்ளார்.

புருலியாவில் ஆயுதங்களைப் போட்ட விமானம் சென்னையில் அங்கீகாரம் இன்றி தரையிறங்குவதற்கு செல்வாக்குள்ள சில அரசியல்வாதிகள் உடந்தையாக இருந்ததாகவும் அவர் குற்றம் சாட்டினார்.

வாரணாசி டார்ஜிலிங், நேபாளத் தலைநகர் காத்மாண்டு ஆகிய இடங்களில் விடுதலைப் புலிகளின் நடவடிக்கைகள் தீவிரமாக இருக்கின்றன என்றும் —

போதைமருந்துகளையும், ஆயுதங்களையும் கடத்துவதற்கு வாரணாசி — காத்மாண்டு வழித்தடத்தை விடுதலைப் புலிகள் பயன்படுத்தி வருவதாகவும் — அவர் கூறினார்.

ஆயுத விமானம் சென்னையில் தரையிறங்கிய போது விமானத்தில் எட்டுப் பேர் இருப்பதாக விமானி கட்டுப்பாட்டு அதிகாரிகளுக்கு தெரிவித்திருந்த அதே சமயத்தில் விமானத்தில் 7 பேர் இருந்ததாக காவல் துறையினர் ஆவணங்களில் பதிவு செய்திருந்தார்கள் என்றும் — சுப்பிரமணிய சுவாமி குறிப்பிட்டார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org